Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

உங்கள் வியாபாரம்
சிறக்க ஈழநாதத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு | மக்கள் நாளிதழ்
Eezhanatham

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 04 | 20.10.2004 புதன்கிழமை | ஓசை 145

# படைகளின் காலிடுக்குள் இருந்து கொண்டு கருணா வரலாற்று துரோகம்!

## தடைகற்கள் தகர்க்கப்படும் என அரசியல்துறை அறிவிப்பு

(நமது நிருபர்)

**கருணாவைக் கண்டு அச்சப்பட எம்மக்கள் என்றும் மந்தைகள் அல்லர் மாவீரர்களின் கனவுகள் மலரும் தடைக்கற்கள் அனைத்தும் தகர்க்கப்படும் இவ்வாறு விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

''அன்பார்ந்த தமிழ் மக்களே" எனக் குறிப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அந்நிய படைகளோடு சேர்ந்து முன்பு இரத்த வெறியாடிய துரோகிகள் இன்று மீண்டும் கூட்டுச் சேர்ந்து கொலைத்தாண்டவம் ஆடத் தொடங்கியிருக்கிறார்கள். படைகளோடு, ஒட்டுப்படைகளாகச் சேர்ந்து வெறியாட்டம் போடும் கோழைகள் அப்பாவி மக்களையும், விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் நாட்டுப்பற்றாளர்களையும் கொன்று குவித்து வருகின்றார்கள். அச்சத்தை விதைத்து மக்களின் விடுதலை உணர்வை கட்டிப்போடலாம் என்று

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஐயங்கேணியில் தேச விரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் நாட்டுப்பற்றாளர் வீரச்சாவு

### விடுதலைப்புலிகள் வீரவணக்கம்

(நமது நிருபர்)

தமிழ்த் தேச விரோதிகள் செவ்வாய்க்கிழமை அதிகாலை மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நாட்டுப்பற்றாளர் கதிர்காமத்தம்பி கணேசமூர்த்தி (41) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

ஏறாவூர் ஐயங்கேணி பாரதி கிராமத்திலுள்ள அவரது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை செவ்வாய் அதிகாலை சென்ற தேசவிரோதிகள் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் பிரிவு வன்மையாக கண்டித்துள்ளதுடன் ஆழ்ந்த அனுதாபத்தையும், வீரவணக்கத்தையும் தெரிவித்துள்ளது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்டக்களப்பு நகரில் படையினர் சோதனை தீவிரம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை பொலிசார் மற்றும் படையினரின் சோதனைக் கெடுபிடி அதிகரித்ததாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

கிங்ஸ்லி ராசநாயகம் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டு துருவித்துருவி விசாரணைகளை மேற் கொண்டதாகவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

## மருதமுனையில் மதரஸ வைபவங்கள்

(வேதசகா)

பெரிய நீலாவணை மஸ்ஜிதுர் ற.்.மத் பள்ளி வாசலின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், மத்ரஸதுர் ற.்.மத் குர்ஆன் மதரசாவின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் ஞாயிறன்று நடைபெற்றது.

அங்கு பயிலும் மதரசா

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஆயுதப் போராட்டம் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று பிரதேச அபிவிருத்தியும் அவசியம்

### தமிழ் கூட்டமைப்பினரிடம் கட்டளை தளபதி கேணல் சொர்ணம் தெரிவிப்பு

(எஸ்.எஸ்.குமார்)


ஆயுதங்கள் மூலமாக மட்டும் மக்களுடைய உரிமைகளையோ மண்ணின் பாதுகாப்பையோ நிலை நிறுத்த முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் சம்பூரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. இங்கு கட்டளைத் தளபதி சொர்ணம் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பாரியளவிலான கடல் பிரதேசம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இப்பிரதேசத்தில் உள்ள கடல் வளம் கவனிக்கப்படாத நிலையில் அடையாளம் காணப்படாது இருக்கின்றது.

ஆயுதங்களைக் கொண்டு சண்டை பிடிப்பதால் மட்டும் எமது மண்ணை பாதுகாக்க முடியும் என எண்ணக் கூடாது மக்களது வாழ்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக்கொலை!



*சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மேலதிக செய்தி உள்ளே*

## மக்களை ஏமாற்றிய நபர் கல்முனையில் பிடிபட்டார்


(துறைநீலாவணை)

கல்முனை, அக்கரைப் பற்று போன்ற கிராமங்களில் பல்வேறு பட்ட கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த போல் என்று அழைக்கப்படும் நபர் கடந்த சனிக்கிழமை பொது மக்களின் ஒத்துழைப்புடன் கல்முனைப் பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

பல கிராமங்களுக்குச் சென்று அங்கு பலருடன் நட்புறவு கொண்டாடி ஒரு வித மயக்க மருந்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட கிங்ஸ்லிராசநாயகம் சுட்டுகொலை!



(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட கிங்ஸ்லி ராசநாயகம் (61) நேற்றுமாலை மட்டக்களப்பு கள்ளியங்காட்டு வீதியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காலம் சென்ற கிங்ஸ்லி ராசநாயகத்திற்கு பாதுகாப்பு வழங்கி வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேமந்த திஸநாயக்கா என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை மட்டக்களப்பு தாமரைக்கே

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### தகவற்துளி

1928இல் அமெரிக்காவின் பிரபல கார்ட்டூன் ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கார்ட்டூன் பாத்திரமான மிக்கி எலியின் படத்தை வரைந்தார்.

# மதியுரைஞர் பாலசிங்கத்தை சொல்ஹெய்ம் லண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் திங்கள் மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**



இலண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும், அடேல் பாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்த எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அந்த நாட்டு இராஜதந்திரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இச்சந்திப்பில் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

அத்துடன் இச்சந்திப்புக்களின் போது, அமெரிக்க மற்றும் கனடிய இராஜதந்திரிகள் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை இருதரப்பினரையும் வலியுறுத்தும்படி தன்னிடம் தெரிவித்ததாக எரிக் சொல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் இலங்கையின் சமகால அரசியல் நிலமைகள், கிழக்கு மாகாண நிலமைகள் குறித்து அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கு எடுத்து விளக்கியுள்ளார். இச்சந்திப்பினை முடித்துக் கொண்டு நோர்வே திரும்பிய எரிக் சொல்ஹெய்ம், நாளைய தினம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினருடனான சந்திப்பிலும் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



இதே சமயம், கடந்த 11 ஆம் திகதி இந்தியாவிற்கு சென்றுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் இந்தியத் தலைவர்களையும், சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார். ஒஸ்லோவில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள சந்திப்பில் விதார் ஹெல்கிசன் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்தமோ சமாதானமோ இணைந்து வெற்றியைப் பெறுவது அவசியம்

(நமது நிருபர்)

யுத்தம் என்றாலும் சரி சமாதானம் என்றாலும் சரி தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ வேண்டியவர்கள் என விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் கூறியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் விழிப்புணர்வு வேலைத் திட்டத்தில் திங்களன்று 4வது நாள் நிறைவடைந்தது. கந்தளாய், தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, சம்பூர் உட்பட 10 ற்கும் மேற்பட்ட இடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்த வைபவங்களில் உரையாற்றிய எழிலன் தமிழ் மக்களைப் பொறுத்த வரை தங்களுடைய பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் என்றாலும் சரி அமைதி வழியிலும் சரி தீர்வு காண முடியும் என கருதுகின்றார்கள். கடந்த காலங்களில் யுத்தத்தின் மூலம் தீர்வு காண முயன்றார்கள், தற்போது அமைதி வழியைப் பின்பற்றுகின்றார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானிய சிறப்புத் தூதர் யசூசி அகாசி சிறிலங்கா, இந்திய நாடுகளுக்கு விஜயம்

(நமது நிருபர்)

சமாதான முயற்சிகளில் மேலதிக பங்களிப்பை வழங்கி வருவதுடன், போரினால் பாதிப்படைந்த பகுதிகளின் புனரமைப்பிற்கும் புனர்நிர்மாணத்திற்குமான சர்வதேச நிதி சேகரிப் பிற்கு பொறுப்பாகவுள்ள ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி இம்மாதம் 27ம் திகதி கொழும்பு வருகிறார்.



கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடாத்தவுள்ள அகாசி, அதைத்தொடர்ந்து கிளிநொச்சிக்குப் பயணித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் விசேட பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளை முன்னெடுக்கவே அகாசி இப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். தனது பேச்சுவார்த்தைகளின் முடிவில் சிறிலங்காவிலிருந்து இந்தியா புறப்படும் அகாசி, அங்கு உயர்மட்ட அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து சிறிலங்காவின் தற்போதைய சமாதான நிலைப்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கவுள்ளார்.

## யாழ் சென்ற பொலிஸ்மா அதிபர் ஊடகவியலாளர்களை சந்திக்க மறுப்பு

(நமது நிருபர்)

நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்த சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, குடாநாட்டு ஊடகவியலாளர்களை சந்திக்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

இவர் குடாநாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள யாழ் மாவட்ட பொலிஸ் தலைமையக அலுவலகத்தில் குடாநாட்டின் பிரதேச பொலிஸ் அதிகாரிகளைச் சந்திக்க கூட்டமொன்றை நடத்தியுள்ளார். இதற்கு முன்னதாக காங்கேசன்துறையில் இடம்பெற்ற பொலிஸ் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் வந்த பொலிஸ்மா அதிபர், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்திவிட்டு நல்லூர் ஆலயம், நாக விகாரைக்குச் சென்று தரிசித்து விட்டு, பலாலி படைத்தளம் சென்று யாழ். குடாநாட்டு சிறிலங்கா படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச் சந்தித்து கலந்துரையாடி விட்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

## பி.ஆர்.எல்.எவ்.முழுப்பொறுப்பும் சுரேஸிடம் வரதர் அணிக்கு உரிமையில்ல எனத் தீர்ப்பு

(நமது நிருபர்)

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகமாக சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியும், அவரின் கீழ் இயங்கும் கட்சியின் மத்திய குழு மற்றும் அரசியல் குழு ஆகியவையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் இயங்குவதற்கு எதிராக விதிக்கப்பட்ட சகல சட்ட உத்தரவுகளும் விலக்கிக்கொள்ளப்பட்டுவிட்டன.

வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழுவினர் ஈ.பி.ஆர்.எல்.எவ்விற்கு சட்ட ரீதியாக இனிமேல் உரிமை கோர முடியாது எனத் தெரிய வருகின்றது. சுரே' பிரேமச்சந்திரனின் ஏற்பாட்டில் நடை பெற்ற கட்சியின் காங்கிரஸ் கூட்டம் செல்லுபடியற்றதெனவும் - அந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கட்சியில் புதிய மத்தியகுழு மற்றும் புதிய அரசியல் விவகாரக்குழு என்பவை சட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டவை அல்ல எனவும் உத்தரவிடக்கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த ஸ்ரீதரன் (சுகு) சுபத்திரன் (தற்போது இறந்துவிட்டார்), துரைரத்தினம், நிவாஸ் நேசராஜா, சிவராஜா (மோகன்) ஆகிய ஜவரின் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம், சுரே' பிரேமச்சந்திரன் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அவர் அழைப்பில் நடைபெற்ற கட்சியின் காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மத்திய குழு மற்றும் அரசியல் விவகாரக்குழு ஆகியவையும் செற்படுவதற்கும் தடைவிதித்து இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருந்தது.

இந்த உத்தரவு காரணமாக கட்சியின் இரு பிரிவினருமே கட்சி சார்பில் உத்தியோக பூர்வமாகச் செயற்படமுடியாத நிலை நிலவி வந்தது. இந்த நிலைமை காரணமாக இருதரப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் அணியினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணி என்றும் செயற்பட்டு வந்தனர். இப்போது கடந்த புதனன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடையுத்தரவை நீக்கிவிட்டது. இதனால் சுரே' பிரேமச்சந்திரனும் அவரின் அணியினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயரில் இயங்குவதற்கு சட்டரீதியாக எந்தத் தடையும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு எதிராக வரதர் அணியினர் ஐவரும் தாக்கல் செய்துள்ள மூல வழக்கை விரும்பமானால் அவர்கள் தொடர்ந்து நடத்தலாம். அவ்வழக்கு விசாரணைகளின் முடிவில் தீர்ப்பு சுரே' பிரமேச்சந்திரன் தரப்பினருக்கு மாறாக வந்தாலன்றி அவர் தொடர்ந்து ஈ.பி. ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகமாகச் செயற்படுவதை வேறு வழியில் தடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதேசமயம்:- ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து வரதராஜப் பெருமாளை நீக்கி சுரே' பிரேமச்சந்திரனும் ஏனையோரும் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக வரதராஜப் பெருமாள் சார்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## செய்தித் துளிகள்

### உரமானிய நிவாரணம் வரையறுப்பு

(எஸ்.ராஜா)

உரமானியத்துக்காக அரசு வழங்கும் நிவாரணம் வரையறுக்கப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவது. ஒக்டோபர் 02 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 திகதி வரை பத்தாயிரம் தொன் பசளை இறக்குமதி செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே அரசு இந்த நிவாரணத்தை உர இறக்குமதியாளர்கட்கு வழங்கும்.

அரசின் தீர்மானம், கமத்தொழில் மற்றும், கால்நடை வளர்ப்பு, காணியமைச்சின் செயலாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் யூரியாவின் விலை அதிகரித்து இருப்பதே இதற்கான காரணமாகும்.

அரசு இதற்குமதியாளர்களுக்கான நிவாரணமாக 01 மெற்றிக் தொன் 23 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க உள்ளது. இதன்படி 56 கிலோ யூரியா 550 ரூபா விற்கப்பட வேண்டும். எதிர்வரும் பெரும் போக நெற் செய்கைக்கு 02 இலட்சம் யூரியா உரம் தேவைப்படும் என விவசாய அமைச்சு எதிர் பார்க்கின்றது.

### நாடாளு மன்றத்தை பார்வையிட ஏற்பாடு

(ராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் உயர்தர பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் பாராளுமன்ற நாளாந்த நடவடிக்கைகளை பார்வை இட உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை அம்பாறை மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் அவர்கள் மேற் கொண்டுள்ளார் அன்று பாராளுமன்றத்தில் இடம் பெறும் நடவடிக்கைகளை இவர்கள் பார்வையிடுவதுடன் மேலும் பல தமது பாடத்தோடு தொடர்புடைய விடயங்களையும் பார்வையிடகல்விச் சுற்றுலாவை மேற்கொள்ள உள்ளனர்.

### மதிப்பீட்டு கலந்துரையாடல்

(கர்சனன்)

கடந்த 1974ம் ஆண்டுக்குப் பின் உடல் உயிர் இழப்பு, உடல் பாதிப்புக்கள், காணாமல் போனோர் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் கலந்துரையாடல் ஏறாவூர்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏறாவூர் பற்று சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.மதியழகன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், உதவிமுகாமையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், ஏறாவூர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

### குளங்கள் புறைமைப்பு

(கணன்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நியாப் திட்டத்தின் கீழ் 05 குளங்கள் புனரமைக்கும் முதற்கட்ட வேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

இதன் அடிப்படையில் வேப்பம்குளம், இத்தியடிக்குளம், பாவட்டாக்குளம், தாமரைக்கேணிக்குளம், வீரையடிக்குளம் போன்ற 05 குளங்களும் இந்த ஆண்டுக்குள் புனரமைக்கப்படும் என பிரதேச செயலாளர் ஏ.கே.தவராசா தெரிவித்தார்.

### அபிவிருத்தித் திட்டம்

(கர்சனன்)

ஜனாதிபதி நிதியிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 20.000 ரூபா வீதம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஒதுக்கப்பட்டு வேலை செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கை பூராகவும் எதிர்வரும் 27ம் திகதி அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து 100.000 பெறுமதிக்கு வேலைகள் நடைபெறவுள்ளன.

# போ என்று சொல்லி புலம்பெயர்ந்த மக்களை வா என்று சொல்ல ஒரு நாடு உருவாக வேண்டும்

## –பரிஸ் நகரில் மூத்த உறுப்பினர் பாலகுமாரன்–



(நமது நிருபர்)

போ என்று சொல்லி புலம் பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் நாள் குறிப்பதற்கு முன் வா என்று சொல்ல எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பரிஸ் நகரத்தில் ஞாயிறு மாலை நடைபெற்ற நினைவெழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அவர், சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயங்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும், அந்தச் சோதனைக் காலத்தைக்கூட சாதனைக்காலமாக மாற்றியவர்கள் நாங்களே என்றும் தெரிவித்தார்.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தை பார்த்து இன்று உலகமே வியந்து நிற்கின்றதென்றும், பேசி வெல்வதற்கும், பேசாமல் வெல்வதற்கும் அவர் தயாராக நிற்பதைப் பார்த்து, என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப் போயுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை பற்றியும், நாட்டின் தேவைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் உணர்வு பூர்வமான உரையொன்றை ஆற்றிய புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், ஊடகங்கள் வாயிலாக புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளை சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆற்றலையும், நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் ''காலத்தை வென்றவன்'' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# உலக வங்கித் தூதுக்குழு நியாப் வேலைகளை மீளாய்வு செய்யும்

(வி.ரி.சகாதேவராஜா)

சிரேஷ்ட நீர்ப்பாசன நிபுணர்நிகால் பெர்ணான்டோ தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட உலக வங்கித் தூதுக்குழு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ''நியாப்'' கட்டம் 1, கட்டம் 2 வேலைத் திட்டங்களை மீளாய்வு செய்யவுள்ளது.

ஒக்டோபர் 22ஆம் திகதி வரை இம் மீளாய்வு நடவடிக்கை தொடருமென்று கூறப்பட்டுள்ளது.

''நியாப் திட்டத்தின் நோக்கத்தினடிப்படையில் அது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? முன்னேற்றம் என்ன? சாதனை என்ன? விழுக்காடு என்ன போன்ற பல விடயங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

2004மே மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களின் முன்னேற்றம், 2005 மார்ச் மாதம் வரை திட்டங்களின் பூர்த்தி தொடர்பாகவும் ஆராயப்படும்.

இக்குழுவினர் வவுனியா, முல்லைதீவு, அனுராதபுரம், மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்வர்.

# ஒரு லீற்றர் பால் 18 ரூபாவுக்கு மில்கோ கொள்வனவு செய்யத் தீர்மானம்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து ''மில்கோ'' நிறுவனம் ஒரு லீற்றர் பாலை 18 ரூபாவுக்கு கால் நடையாளர்களிடமிருந்து கொள் வனவு செய்யவுள்ளது.

இதுவரை ஒரு லீற்றர் பால் 15 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்பட்டு வந்தது.

விவசாயக் காணி கால் நடை நீர்பாசன அமைச்சர் அனுரகுமார திசாநாயக்க அமைச்சரவைக்கு சமர்பித்த பத்திரப்படி 3 ரூபாவைக் கூட்டி கொள்வனவு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் படி ஒரு லீற்றர் பால் 18 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய ப்படும். இதனால் சுமார் 31 ஆயிரம் கால் நடையாளர்கள் நன்மை பெறுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறை, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், பொலனறுவை, திருகோணமலை, கண்டி, ரத்னபுரி, கம்பஹா, கேகாலை, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் கூடுதல் பால் உற்பத்தியாவது குறிப்பிடத்தக்கது.

# எமது நாட்டில் 60 வீதமான பெண்கள் வன்முறைக்குள்ளாகின்றனர்

(வேதசகா)

''நம்நாட்டுப் பெண்களில் 60 வீதமான பெண்கள் இல்லத்து வன்முறைகளால் துன்பப்படுகிறார்கள். அவை உடல் மீதான வன்முறைமட்டுமல்ல மாறாக மானசீக வதை, பொருளாதாரவதை என்பவற்றிலும் அடங்கும்''

இவ்வாறு ''பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்போம்'' என்ற அமைப்பின் அம்பாறை மாவட்ட கருத்தரங்கில் உரையாற்றிய சட்டத்தரணி எஸ். ஜெகநாதன் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கு அக்கரைப்பற்று வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் ''ஒக்ஸ்பாம்'' அனுசரணையில் நடைபெற்றது.

''இலங்கையில் 2003இல் பெண்களுக்கு எதிரான சம்பவங்கள் 2155 பொலிஸில் பதியப்பட்டுள்ளன. இவற்றில் 690 உடல் ரீதியானதும், 1006 பாலியல் துஸ்பிரயோகமும் இடம் பெற்றுள்ளன. இவை ஒழிக்கப்பட வேண்டும் என்றார்.

மனித உரிமை ஆணைக் குழு கல்முனை இணைப்பாளர் இரா. மனோகரன், ஒக்ஸ்பாம் இணைப்பாளர் எம். லோகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# வடக்கு கிழக்கை சேர்ந்த 750 தொண்டராசிரியர்க்கு நிரந்தர நியமனம்

(ராஜா)

நாடு முழுவதும் 2600 தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர். இவர்களில் 750 பேர் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள். இதற்கான அனுமதியை அமைச்சரவையில் பெறப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் ''தாரடிமெல்'' தெரிவித்துள்ளார். கடந்த வருடம் 900 தொண்டர் ஆசிரியர்கள் வடக்குக் கிழக்கில் நியமனம் பெற்று இருந்தனர். இதற்கு மேலதிகமாக இந்நியமனங்கள் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு களுவாஞ்சிகுடியில் விழிப்புணர்வு பேரணி!

(எஸ்.ரவீந்திரன்)

தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வுப் பேரணி நேற்று காலை பட்டிருப்பு தேசியப் பாடசாலையில் இருந்து ஆரம்பமாகி களுவாஞ்சிகுடி மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை வரை சென்றடைந்தது. களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம், பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட இப்பேரணியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தேசிய நூலக ஆவணங்கள் சேவைகள் சபையினால் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இத்தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு களுவாஞ்சிகுடி பொது அலுவலக நூலக அனுசரணையின் கீழ் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

விஷேட மொழி தின பதாதைகள் கட்டுதல், பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் போட்டி நடாத்தி பரிசில்கள் வழங்கல், நூலகத்தை அபிவிருத்தி செய்தல் இதற்கான சிரமதானம் ஒன்றினை ஏற்பாடு செய்தல், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், நூலகத்தின் வாசிப்பை அமுல்படுத்துதல்,, வாசிப்பில் ஈடுபடுவோரை எடுத்துப் பாராட்டுதல், வாசிப்பை மேம்படுத்தும் நோக்கில் துண்டுப் பிரசுரம் வெளியிடல், சாகித்திய விஷேட பரிசு பெறும் ஒருவரை கௌரவித்தல் போன்ற செய்தித் திட்டங்களை களுவாஞ்சிகுடி பொது நூலகம் நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பில் ஆயுர் வேத வைத்தியசாலையை இயங்க வைப்பது சம்பந்தமாக மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் கிழக்கிலங்கை சித்த வைத்தியர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் க. தங்கேஸ்வரி உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்: –கே. வாமதேவன்)

# ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு ஒப்பந்த அடிப்படை நியமனம் இடை நிறுத்துமாறு கல்வி நிர்வாக சங்கம் கோரிக்கை

(அ.தர்மா)

இலங்கை கல்வி நிருவாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகளை இலங்கைக் கல்வி நிருவாக சேவை சங்கம் கல்வி அமைச்சரும் ஜனாதிபதியுமாகிய சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவிற்கும் ஆளுனரிடமும் விடுத்துள்ளது. இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது: இலங்கை கல்வி நிருவாக சேவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரிகளுக்கு அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரிகளின் தனிப்பட்ட செல்வாக்குக் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது. விஷேடமாக வடக்குக் கிழக்கு மாகாணத்திலே இந்த நடைமுறை பின்பற்றப்படுகின்றது. இச்செயற்பாட்டால் சேவையிலுள்ள இளம் அதிகாரிகளும் சேவை மூப்புள்ள அதிகாரிகளும் மிகுந்த மன உளச்சலுக்கும் பாதிப்புகளுக்குமுள்ளாகி வருகின்றனர். கல்வித் துறையில் இவ்வாறான மீள் நியமனம் இடம் பெற்று வருகின்றது. ஏனைய அரசதுறைகளில் இந்நியமனங்கள் இடம பெறுவதில்லை.

கல்வித் துறையில் மீள் நியமனம் பெறும் அதிகாரிகளால் கல்விச் சட்டங்களும் நிர்வாகவும் நீதி நடவடிக்கைகளும் பல மட்டங்களில் மீறப்பட்டு வருகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கெதிராக அரச கட்டளைகளின்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளிலும் அக்கறை காட்டவேண்டும்

(அட்டாளைச்சேனை நிருபர்)

ஆசிரியர்கள் புத்தகக் கல்வியினை மாத்திரம் கற்பித்து விட்டு பாடப்பரப்பு அலகுகளை பூரணப்படுத்துவது பூரணமான கற்பித்தல் முறையன்று. மாறாக ஆசிரியர்கள் மாணவர்களது புறக்கிருத்திச் செயற்பாடுகளிலும், இதர கல்வி சார் செயற்பாடுகளிலும் அக்கறை கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் க.பொ.த.(உ.த) மாணவர்களது பிரியாவிடை வைபவத்தின் போது ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கலை நிகழ்வின் போதே அதிபர் ஏ.சீ.சைபுதீன் இக் கருத்தினைத் தெரிவித்தார்.

அதிபர் மேலும் கூறியதாவது: இன்றைய சூழ் நிலையில் உள்ள மாணவர்கள் மத்தியில் ஏராளமான திறமைகள் பொதிந்து காணப்படுகின்றன. அவர்கள் அதனை வெளிக்காட்டாது விட்டு விடுகின்றனர். இவர்களது திறமைகள் நிச்சயமாக எமது சமூகத்திற்கு தேவையானதாகும். இன்றைய மாணவ சமூதாயமே நாளை எம் நாட்டு தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவர்கள். ஆகையினால் அவர்களது உள்ளங்களில் நற்சிந்தனைகளை வளர வைக்க வேண்டும் என்றார்.

# 25 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி

(நமது நிருபர்)

அதிகரித்துவரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்திக் குறைந்த விலையில் அரிசியை விற்பனை செய்வதற்காக 25ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இந்த வாரத்துக்குள் இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது.

கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலும், கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் விற்கப்பட்டபோதும் ஒருவருக்கு ஐந்து கிலோ அரிசி மட்டுமே வழங்கப்படுகிறது. அதுவும் வரிசையில் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனப் பொது மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

வரிசையில் நின்று அரிசி வாங்கும் ஓர் அவல நிலையில் மக்கள் இருப்பதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




## காய்கறி மருத்துவம்

நாம் அன்றாடம் உண்ணும் காய்கறி வகைகளில் பல மருத்துவக் குணங்கள் அடங்கியிருக்கின்றன. அதற்கு ஏற்றால் போல் அந்தக் காய்கறிகளை உண்டு அந்தப்பலன்களை அடையலாம்.

**அவரைக்காய்:-**


உடல் கனத்தைக் குறைக்கும் வாயுவைப் போக்கும், வாய் நாற்றத்தை நீக்கும் மூட்டுக்களில் ஏற்படும் வலி வீக்கம் ஆகியவற்றைப் போக்கி ஜீரணத்தை எளிதாக்கும், மலக்கட்டைப் போக்கும், நீரிழிவு நோயைக் குறைக்கும், எலும்புகளை வலுப்படுத்தும், ஆண்மையைப் பெருக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலிக்கு பிஞ்சு அவரைக்காயை மை போல் அரைத்து சிறிது



விளக்கெண்ணையில் குழைத்து தொப்புளைச் சுற்றி பற்றுப் போட வலி உடனே நீங்கும்.

**வாழைப்பூ:-**

வயிற்றுப்புண், வாய்நாற்றம், சீதபேதி மூலம், சீர்கேடான மாதவிலக்கு பற்களில் பூச்சி, இருமல், அரிப்பு, வியர்வை நாற்றம், வெண் குஷ்டம், மலட்டுத் தன்மை, வயிற்றுக் கடுப்பு, கைகால்களில் ஏற்படும் பித்த எரிவு போன்றவற்றை வாழைப்பூ நீக்கும்.



**வாழைக்காய்:-**

பித்தம், பித்த வாந்தி உடல் சூடு, சூட்டு இருமல், தலைச்சுற்று என்பனவற்றை நீக்கும்.

**வாழைத்தண்டு:-**


உடம்பிலுள்ள கொழுப்பைக் குறைக்கும். வயிற்றுப் புண் குணமாகும். நீரிழிவு நோயைத் தடுக்கும், தொந்தி ஊளைச் சதை என்பனவற்றைக் குறைக்கும் சிறுநீரக உறுப்புக்களை நன்கு செயற்பட வைக்கும். மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த மருந்து.

**முருங்கைக்காய்:-**

கடுமையான இரத்த சீதபேதி, வயிற்றுப்புண், தலைவலி, வாய்ப்புண் இந்த வியாதிகளுக்கு முருங்கைக்காய் கைகண்ட மருந்து. முருங்கைக்காயை வேக வைத்து சிறிது உப்புச் சேர்த்து உண்ணலாம். முருங்கைக்காய் சாம்பார் சுவையாக இருப்பதோடு மட்டுமன்றி மலச்சிக்கல் வயிற்றுப்புண், கண்நோய் இவற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகின்றது.

# மனித இனத்தை அச்சுறுத்தும் நோய்களில் புற்று நோய் இன்று முதலிடம் வகிக்கின்றது:

ஆரோக்கியமாக வாழ்வது பற்றி போதிய விழிப்புணர்வின்மையே இன்று



மனிதனை பல வகையான நோய்கள் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. விழிப்புணர்வு இருந்தால் பல நோய்களை முற்றுமுன்பே தடுத்து விடலாம். அதாவது ஆரம்ப நிலையிலேயே அதனைத் தடுத்து விடலாம்.

மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களில் புற்றுநோய் முதலிடத்தை வகிக்கின்றது. பெண்களில் அதிகளவில் கர்ப்பப்பை, கர்ப்பப்பை வாய், மார்பகப்புற்று நோய், வாய்ப் புற்று நோய் போன்றவற்றால் பாதிக்கப்படுகின்ற னர். ஆண்களைப் பொறுத்த வரை வாய்ப்புற்று நோய், பெருங்குடல், உணவுக் குழாய், நுரையீரல், போன்ற புற்று நோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர். புற்று நோயை ஆரம்பத்திலே கண்டுபிடித்தால் குணப் படுத்திவிடலாம்.

## புற்று நோய் என்றால் என்ன?

மனித உடலிலுள்ள செல்லின் மையக் கருவில் உள்ள டி.என்.ஏயில் பத்தாயிரம் மரபணுக்கள் உள்ளன. இந்தமரபணுக்கள் தான் செல்லை இயக்குகின்றன. செல் எப்படி உருவம் எடுக்க வேண்டும், எப்படிச் செயற்பட வேண்டும். என்று மரபணுக்கள் தான் கட்டளையிடுகின்றன. இந்த மரபணுக்கள் சேதப்பட்டால் மரபணுவின் செய்தி மாறுபட்டு தவறான மரபணுச் செய்தியால் ஒரு புதுவகையான செல் உருவாகிறது. இந்த மாறுபட்ட மரபணுவிற்கு ஆன்கோஜன் என்று பெயர் மாறுபட்ட செல்கள் பல்கிப் பெருகி புற்றுநோய் கட்டியாக மாறுகின்றது. இவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் பயனற்று வளர்ச்சி விதிகளுக்கு உட்படாது பெருகி வளரும் திசுத் திரளையே புற்று நோய் என்கின்றோம்.

## இதன் காரணங்கள்:-

உணவுப் பற்றாக்குறை, விற்றமின் சத்துக் குறைவு, தாதுப்பொருள் குறைவு போன்றவை உடலின் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து புற்றை வளர விடுகின்றன. விற்றமின் ஏ.சி.சி செலி னியம் போன்றவை இவ்வளர்ச்சியைத் தடுக்க உதவுகின்றது.

## வெளிக்காரணிகள்:-

தார் எண்ணெயிலுள்ள பென்சாள் தரசின் காரணமாக தோல்புற்று, விரைப்புற்று சிறுநீரகப் புற்று நோய்கள் ஏற்படுகின்றன. முறையற்ற உணவுப் பாரம்பரியம் போன்ற காரணங்களால் மார்பகம், பெருங்குடல், மலக்குடல், புற்று வருகின்றது. புகைப்பிடித்தல், போதைப் பொருட்களின் பாவனையால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகின்றன.

## மார்பகப் புற்று:-


குழந்தை இல்லாத பெண்கள், கருத்தடை மாத்திரைகள் அதிகம் பாவிக்கும் பெண்கள், 50 வயதிற்குப் பின் மாதவிடாய் நிற்கும் பெண்கள் கொழுப்புச் சத்தை அதிகமாக உட்கொள்ளும் பெண்கள் இவர்களுக்கு மார்பகப் புற்று நோய் வர வாய்ப்புண்டு.

## வாய்ப்புற்று நோய்:-

நாக்கு அல்லது வாய்த் தோல் தடிப்பு வெள்ளை நிறப்படை வெடிப்பு வலியற்ற கட்டி போன்றவை காணப்பட்டால் வைத்தியரிடம் சென்று உரிய பரிசோதனை செய்து புற்று நோயா இல்லையா என தெரிந்து கொள்ள வேண்டும். ஆரம்ப அறிகுறிகள் இருக்கும் போது உரிய பரிசோதனை செய்து புற்று நோய் என உறுதிப்படுத்தி விட்டால் பூரணமாக குணப்படுத்தி விடலாம்.

## புற்று நோயை உணவால் தடுக்க முடியுமா?

ஆம் புற்று நோயை உணவால் தடுக்க முடியும் என்று கூறுகின்றது விஞ்ஞானம். பீற்றா கரோட்டின், செலினியம் போன்ற இயற்கைச் சத்துக்களும், புற்று நோய் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துகின்றது. அவரை, மொச்சை, பட்டாணி குளிர்மை வகையான தானியங்கள் மற்றும் உருளைக்கிழங்கு, போன்றவற்றில் புற்று நோயைத் தடுக்கும் சத்துக்கள் அதிகம் உள்ளன. சமையல் எண்ணெய், றொட்டிகள், பிஸ்கட்டுக்கள், மருந்துகள் போன்றவை பழுதாகாமல் பாதுகாக்க பியூட்டிலேடட் ஹைராக்கி அணிசோல் என்ற இரசாயனத்தைக் கலக்குகிறார்கள். இது ஒட்சிசன் ஏற்றத்தைத் தடைசெய்து உணவுப் பொருட்களைப் பாதுகாக்கின்றது. இந்தப் பொருள் 11 வகை புற்று நோய்க்காரணிகளைத் தடுத்து நுரையீரல் உணவுக்குழாய், பெருங்குடல், போன்ற உறுப்புக்களில் புற்றுநோய்




வராமல் தடுக்கின்றது.

## புற்றுநோய்க்கு கூடாதவை:-

வேர்க்கடலை, பாதாம் பருப்பு, முந்திரியம்பருப்பு போன்றவற்றை சாப்பிடக்கூடாது. குறிப்பாக அவற்றின் தோல்களிலிலுள்ள அ.'. பளோடாகளின் என்ற விசப் பொருள் சிறிது சிறிதாக நமது உடலில் சேர்ந்து கல்லீரல் புற்று நோயைத் தோற்றுவிக்கின்றது. அத்துடன் புகைப்பிடித்தல். மதுபானம் அருந்துதல் என்பன நுரையீரல் புற்றுநோயை மேலும் வலுவூட்டும்.

# போதிய விழிப்புணர்வு இன்மையால் இன்று மனிதனை பல்வேறு நோய்கள் ஆட்டிப்படைக்கின்றன

# தொற்று நோய்களைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்குவோம்

## தொற்று நோய் என்பது:-

ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கு, மிருகத்திலிருந்து மனிதனுக்கு பரவும் நோயாகும்.

இந்த நோய்கள் நீரினால், காற்றினால், உணவில் பூச்சிகளினால், தூசுகளினால் பரப்பப்படலாம்.

நல்ல சுயநலப்பழக்க வழக்கங்கள் கடைப்பிடிப்பதன் மூலம் இந்நோய்கள் எமக்கு பரவுவதைத் தடுக்கலாம்.

## நோய்கள்:-

**01. மலேரியா, டெங்கு, இவை நுளம்பின் மூலம் பரப்பப்படும் நோய்.**

*தடுப்பதற்கான முறைகள்:-*

☞ வசிப்பிட சுற்றாடலை துப்பரவாக வைத்திருத்தல்

☞ நுளம்பு கடிப்பதிலிருந்து எம்மைப் பாதுகாத்தல் ( உ.ம்) நுளம்பு வலை பாவனை.

☞ நோய் காணப்படும் பிரதேசத்திற்கு செல்லும் முன் தடுப்பு சிகிச்சை பெறல்.

☞ நோயாளிகள் உடனடி சிகிச்சை பெற்றுக் கொள்ளல்.

☞ கர்ப்பிணிகள் கிளினிக்களில் சிகிச்சையைப் பெறல்.

☞ மருந்து தெளிப்போருக்கு ( நுளம்பு கொல்லி) பூரண ஒத்துழைப்பு வழங்கல்.

**02. வாந்தி பேதியும் (கொலறா) ஏனைய வயிற்றோட்ட நோய்களும்: இந்நோய்கள் நீர், உணவு என்பனவற்றால் பரப்பப்படும்:-**

*தடுப்பதற்கான வழிகள்:-*

☞ எப்போதும் கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்

☞ மலங்கழித்து சுத்தம் செய்த பின் சவர்க்காரம் இட்டுக் கைகழுவவும்.

☞ உணவுப் பண்டங்களில் ஈ மொய்க்காதபடி மூடி வைக்கவும்.

☞ நோயாளி பாவித்த பாத்திரங்களை சவர்க்காரமிட்டு தொற்று நீக்கவும்.

☞ வெளியில் மலங்கழிப்பதைத் தவிர்க்கவும்

☞ சிறுவர்களது மலத்தைப் பாதுகாப்பாக மலசலகூடக் குழியில் இடவும் அல்லது புதைக்கவும்.

☞ குடி நீர் பழுதடைவதிலிருந்து பாதுகாக்கவும்.

☞ நீர் சேகரிக்கும் பாத்திரத்தை ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்யவும்.

☞ உணவு உண்ணும் முன்னரும், உணவு தயாரிக்கும் முன்னரும் சவர்க்காரம் இட்டு கை கழுவவும்.

☞ மரக்கறி வகைகளை கழுவிய பின்னரே சமைக்கவும்.

☞ பழங்களை நன்கு கழுவிய பின்னரே உண்ணவும்.

☞ பகல் சமைத்த உணவை இரவில் உண்ணும் போது மீண்டும் சூடாக்கவும்.

☞ சம்பல், பச்சடி போன்ற உணவுப் பதார்த்தங்களை தயாரிக்கும் போது விசேட கவனம் செலுத்தவும்.

☞ மிருகங்களுடன் விளையாடிய பின் சவர்க்காரமிட்டு கை கழுவவும்.

☞ காயம், சிரங்கு உள்ளவர் உணவு தயாரிப்பதைத் தவிர்க்கவும்.

☞ காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளவர் உணவு தயாரிப்பதைத் தவிர்க்கவும்.

☞ சிறுவர்களுக்கு ஐஸ்பழம் போன்ற உணவுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

☞ சிறுவர்களுக்குத் தாய்ப்பால் ஊட்டலை ஊக்குவிக்கவும் (புட்டிப்பால் வழங்குவதைத் தவிர்க்கவும்)

☞ பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் பாத்திரங்கள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றைச் சுத்தமாகப் பேணவும்.

☞ வயிற்றோட்டம் உள்ள பிள்ளைகளுக்கு ஜீவனி, இளநீர், குளுக்கோஸ் வழங்கவும்.

இவ்வாறான பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

## காற்றின் மூலம் பரவும் நோய்:-

☞ இருமும் போதும், தும்மும் போதும் கைக்குட்டை பாவிக்கவும் கையை வாயில் வைத்துத் தும்மவும்.

☞ தடிமன் உள்ளவர் குழந்தைகளுடன் பழகுவதைத் தவிர்க்கவும்.

*தமிழீழ சுகாதார சேவைகள் மட்டு*
*அம்பாறை மாவட்டம்*

# இந்திய படையை கதிகலக்கிய சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக் கொலை!

## -தமிழக அதிரடி படைக்கு இமாலய வெற்றி-



(சென்னை)

தமிழகம், கர்நாடக மாநில பொலிசாருக்கு சிம்ம சொப்பனமாக இருந்த சந்தனக்கடத்தல் வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன் உட்பட நான்கு பேரை தர்மபுரி அருகே தமிழக அதிரடிப்படை சுட்டு கொன்றது. சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தீவிரவாதி என்று கூறப்படுகிறது.

தமிழகம் மற்றும் கர்நாடக மலைப் பகுதிகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வீரப்பன் காட்டு தர்பார் நடத்தி வந்தான். மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள சந்தன மரங்கள், யானை தந்தம் போன்றவற்றை வெட்டி கடத்தி விற்று லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்தான். அவனின் சட்ட விரோத செயல்களைத் தடுக்க முயன்ற வனத்துறையினர், பொலிசாரை ஈவு இரக்கமின்றி வெட்டி கொன்றான்.

தமிழகம் மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த வனத்துறையினர் மற்றும் பொலிசாரை அதிகளவில் கொடூரமாக கொலை செய்து வந்த சந்தண கடத்தல் வீரப்பனை பிடிக்க தமிழகம் மற்றும் கர்நாடகா அரசு கூட்டு அதிரடிப்படையை அமைத்து வீரப்பனை தேடும் பணியில் ஈடுபட்டன. இதற்கிடையில், பொலிஸ் உயரதிகாரிகளையே கடத்தி கொண்டு போய் பணம் பறிக்கும் வேலைகளில் வீரப்பன் ஈடுபட்டான்.

கடந்த அ.தி.மு.க., ஆட்சியின் போது டி. எஸ். பி., சிதம்பரநாதன் உட்பட சிலரை வீரப்பன் கடத்தி கொண்டு போய் காட்டில் சிறை வைத்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினான். அப்போதைய அ.தி.மு.க., அரசு அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு டி. எஸ். பி. , மற்றும் பொலிசாரை மீட்டது.

அதற்கடுத்து வந்த தி.மு.க., ஆட்சியின் போது பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் பலரை அதிரடியாய் வீரப்பன் துப்பாக்கி முனையில் கடத்திக் கொண்டு போய் காட்டில் சிறை வைத்தான்.

இருமாநில முதல்வர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் முடிவில் வீரப்பனுக்கு பொது மன்னிப்பு வழங்கவும் யோசனை முன்வைக்கப்பட்டது. இதன் முடிவில், நடிகர் ராஜ்குமார் மற்றும் அவருடன் பிடித்துச் சென்றவர்களை வீரப்பன் விடுதலை செய்தான்.

அதன் பிறகு மைசூர் பகுதியில் கர்நாடகாவை சேர்ந்த நாகப்பாவை வீரப்பன் கடத்தி சென்றான். அப்போதும் இரு அரசுகளும் வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால், நாகப்பாவை வீரப்பன் சுட்டு கொன்றான். அதன் பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் வீரப்பன் எந்தக் கடத்தல் வேலைகளிலும் ஈடுபடவில்லை. இருமாநில அதிரடிப்படையின் தீவிர கண்காணிப்பினால் மலைக் கிராமங்களில் வீரப்பன் நடமாட்டம் குறைந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே பிக்கிலி கிராமத்தில் சந்தனக்கடத்தல் வீரப்பன் தனது நெருங்கிய கூட்டாளி சேத்துக்குளி வீரப்பன் மற்றும் பலருடன் மறைந்து இருப்பதாக தமிழக அதிரடிப்படைக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதனையடுத்து தமிழக அதிரடிப்படை எஸ்.பி., செந்தாமரைக் கண்ணன் தலைமையில் பொலிசார் வீரப்பன் கும்பல் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். பலமணி நேரம் நீடித்த துப்பாக்கி சூட்டின் முடிவில் சந்தணக் கடத்தல் வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திரகவுடா, தீவிரவாதி சேதுமணி ஆகியோரை அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றனர்.

அதன்பிறகும் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை வீரப்பன் கூட்டாளிகளுக்கும், அதிரடிப்படையினருக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்தது.






சுட்டுக் கொல்லப்பட்ட சந்தன வீரப்பன். சேத்துக்குளி கோவிந்தன்.

### அதிரடிப்படை முகாமில் கொண்டாட்டம் :

சத்தியமங்கலம் : வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து சத்தியமங்கலம் அதிரடிப்படை தலைமை முகாமில் பட்டாசு வெடித்து வீரர்கள் கொண்டாடினர். வீரப்பனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழக அதிரடிப்படையின் முகாம் சத்தியமங்கலம் எஸ். எஸ்.



மகாலில் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் தர்மபுரி அருகே பாப் பாரப்பட்டி வனப்பகுதியில் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார். இத்தகவலை அறிந்த அதிரடிப்படை வீர்கள், நேற்று முன்தினம் நள்ளிரவு முகாம் அலுவலக வாயிலில் பட்டாசுகளை வெடித்துக் கொண்டாடினர். அப்பகுதியில் வந்த பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி, தங்கள் மகிழ்ச் சியை வெளிப்படுத்தினர்.

### தர்மபுரி வைத்தியசாலையில் உடல்கள்:

சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கவுடா, சேத்துமணி (எ) கோவிந்தன் ஆகிய நால்வர் உடல்களும் நேற்று முன்தினம் நள்ளிரவு தர்மபுரி அரசு வைத்தியசாலைக்கு பிரேத பரி சோதனைக்காக கொண்டு வரப் பட்டன.

### கை கொடுத்தது புதிய முயற்சி :

தமிழகத்தின் தர்மபுரி, சேலம், ஈரோடு, கோவை, நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் மற்றும் கர்நாடக மாநிலம் மைசூர் மாவட்டத்தில் 6 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் அடர்ந்த காட்டுப்பகுதியாக உள்ளது. இதுதான் வீரப்பனின் பலம். இந்த அடர்ந்த காட்டுப்பகுதியில் நுழைந்து வீரப்பனை தேடிப் பிடிப்பது சாதாரணமல்ல.

சமீப காலமாக மலைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்ததோடு, அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான வழிவகைகளையும் அதிரடிப்படையினர் மேற்கொண்டு, அதிரடிப்படை மீது மலைவாழ் மக்கள் கொண்டிருந்த அதிருப்தியை படிப்படியாக குறைத்தது.

அதிரடிப்படை மற்றும் பொலிசார் மலைக்கிராம மக்களிடம் நடத்திய அத்துமீறல்களால் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் உசாராக்கப்பட்டு இருந்தபோதும், அதிரடிப்படையின் புதிய முயற்சி காரணமாக மலைக்கிராம மக்கள் அதிரடிப்படைக்கு வீரப்பன் கும்பல் இருக்கும் இடம் குறித்து சரியான தகவல்களை சொல்ல முன்வரும் நிலைக்கு மாறத் தொடங்கினர். அதுவே தற்போது பெரிதும் கை கொடுத்திருக்கிறது என்கின்றனர் அதிரடிப்படையினர். அதிரடிப் படையினரின் துப்பாக்கிச்சூட்டை சமாளிக்க முடியாமல் வீரப்பனின் மற்றக் கூட்டாளிகள் சிலர் தப்பி ஓடினர். அவர்களைப் பிடிக்கும் முயற்சியில் அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர். பிக்கிலி கிராமம் மற்றும் மலைப் பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். அதிரடிப் படைத் தலைவர் விஜயகுமார் சம்பவ இடத்தில் முகாமிட்டுள்ளார். அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வீரப்பன், சேத்துக் குளி கோவிந்தன், கூட்டாளிகள் சந்திர கவுடா ஆகியோரின் உடல்கள்



வீரப்பனும் அவனுடைய கூட்டாளினதும் உடல்கள் தர்மபுரி மருத்துவமனையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக தர்ம புரி அரசு மருத்துவமனைக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப் பட்டது.

### அதிரடிப்படை தலைமை முகாமில் முன்கூட்டியே தீபாவளி கொண்டாட்டம் :

தர்மபுரி அருகே உள்ள வனப்பகுதியில் சந்தனக்கடத்தல் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் தமிழக அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற செய்தி, சத்தியமங்கலம் அதிரடிப் படை தலைமை முகாமிற்கு கிடைத்தவுடன், அங்கிருந்த வீரர்கள் நள்ளிரவிலும் அட்வான்ஸ் தீபாவளி கொண்டாட்டமாக விடிய, விடிய பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர்.


சந்தனக்கடத்தல் வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழக அதிரடிப்படையின் முகாம் சத்தியமங்கலம் எஸ். எஸ். மகாலில் இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் தர்மபுரி அருகே பாப்பாரப்பட்டி வனப்பகுதியில் வீர



ப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார். இத்தகவலை அறிந்த அதிரடிப்படை வீரர்கள், நேற்று முன்தினம் நள்ளிரவில் முகாம் அலுவலக வாயிலில் பட்டாசுகளை வெடித்து கொண்டாடினர். வெடி சத்தங்களை கேட்டு வந்த பொதுமக்களுக்கும் இனிப்புகளை வாரி வாரி அதிரடிப்படையினர் வழங்கி மகிழ்ச்சியில் திளைத்தனர்.

### கடலூர் பள்ளியில் படிக்கும் வீரப்பன் மகள் பிரபா :

தமிழக அதிரடிப்படையினரால் சந்தன கடத்தல் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட தகவல் கடலூர் தனியார் பள்ளியில் படிக்கும் அவரது மகளுக்கு நேற்று நள்ளிரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தண கடத்தல் வீரப்பன் மகள் பிரபா (12) கடலூர் கூத்தப்பாக்கம் செயிண்ட் ஜோசப் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் கடந்த ஜூன் மாதத்தில் தான் இப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். இதற்கு முன்பு மேட்டூர், கோவை, செங்கல்பட்டு பள்ளிகளில் படித்துவந்துள்ளார். சந்தண கடத்தல் வீரப்பன் நேற்று முன்தினம் இரவு தமிழக அதிரடிப் படையினரால் சுட்டு கொல்லப்பட்ட தகவல் பத்திரிகையாளர்கள் மூலமாக பள்ளி நிர்வாகத்திற்கு தெரிய வந்தது. இதனையடுத்து மாணவி பிரபாவிடம் அவரது தந்தை சுட்டு கொல்லப்பட்ட தகவலை கூறி வெளியில் அழைத்து வந்தனர். போட்டோ கிராபர்கள் அவரை படம் எடுத்ததை பார்த்ததும் மீண்டும் விடுதிக்குள் சென்றுவிட்டார். அவரது தந்தை சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்தது முதல் பிரபா சோகமாக காணப்பட்டார். மாணவி பிரபாவை அழைத்துச் செல்ல வீரப்பனின் உறவினர்கள் கடலூருக்கு வருவதாக தகவல் கிடைத்ததை அடுத்து நிருபர்களும், போட்டோ கிராபர்களும் அப்பள்ளி முன்பு நேற்று முன்தினம் அதிகாலை வரை காத்துக் கொண்டிருந்தனர்.



சுட்டுக் கொல்லப்பட்ட சந்திர கவுடா. கோவிந்தன்.




## அனில் கும்ளே ஆட்ட நாயகன்




பதிமூன்று விக்கெட் வீழ்த்திய அனில் கும்ளே ஆட்ட நாயகன் விருது, பைக் பரிசு பெற்றார். பிறகு அளித்த பேட்டியில், வெற்றி பெற்றிருக்க வேண்டிய ஆட்டம் இது. மழையால் சமநிலை ஆனது ஏமாற்றமாக இருக்கிறது. எனது அடுத்த இலக்கு, டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட் வீழ்த்துவதுதான்.அதற்கு முன்னால், அடுத்த இரு போட்டிகளையும் இந்தியாவுக்கு வென்று தரவேண்டியதுதான் முக்கிய இலக்கு, என்றார்.

## மழை பெய்தது துரதிஸ்டமே வருந்துகிறார் கங்குலி!

(சென்னை)

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான திங்கள் கடைசி நாள் ஆட்டத்தில் மழை குறுக்கிடவே சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இது குறித்து இந்திய அணி தலைவர் சவுரவ் கங்குலி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், இரண்டு அணிக்கும் வெற்றி வாய்ப்பு சமமாகத் தான் இருந்தது. மழை குறுக்கிடாமல் இருந்திருந்தால் இரு அணிகளில் யார் வேண்டுமானாலும் ஜெயித்திருக்கலாம். ஆனால் தற்போது நமது அணி நல்ல நிலையில் உள்ளது. இரண்டாவது இன்னிங்சில் 300க்கும் அதிகமான ஓட்டங்கள் வெற்றி இலக்கு என்றாலும் கூட நாங்கள் எடுப்பதற்கு வாய்ப்பு இருந்தது. இந்த நிலையில் மழை வந்து ஆட்டம் டிரா ஆனது வருத்தத்தை அளிக்கிறது, என்றார். மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் வருவாரா? என்பது குறித்து அவரிடம் கேட்ட போது, சச்சின் தற்போது



காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்து வருகிறார். நாக்பூரில் அவர் விளையாடுவதற்கு வாய்ப்பு உள்ளது, என்றார்.

## சாதனைகளை ஏற்படுத்திய இரண்டாவது தொடர்

சேப்பாக்கத்தில் நடந்த இந்தியா ஆஸி.,அணிகளுக்கு இடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் மழையால் சமநிலை ஆனாலும் கூட, சில தனிநபர் சாதனைகள், ரசிகர்கள் நினைவில் நிச்சயம் நீண்ட நாள் இருக்கும்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற நீண்ட நாள் லட்சியத்தை எட்டினார் ஷேன் வார்ன். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் நமது அனில் கும்ளே 415 விக்கெட்டுகளுடன் ஏழாவது இடத்துக்கு முன்னேற முடிந்தது. மீண்டும் ஒரு மிகச்சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்திய அனில், இந்தப் போட்டியில் 181 ஓட்டங்களுக்கு 13 விக்கெட் வீழ்த்தி, ஆஸ்திரேலியாவை ஆதிக்கம் செலுத்தினார்.

ஆட்டம் சரியில்லை என்று பல தரப்புகளில் இருந்தும் கண்டனங்கள் குவிய. வெறுத்துப் போயிருந்த வீரேந்தர் சேவாக், மகிழ்ச்சியுடன் அடுத்த போட்டியில் களமிறங்கலாம். இங்கு அவருக்குக் கிடைத்த 155ஓட்டங்கள், புதிய தன்னம்பிக்கை அளிக்கும். ஆஸ்திரேலிய அணியிலும் கூட, தடுமாறிக் கொண்டிருந்த மார்ட்டின், ஒரு சதம் அடித்து தனது பெயரைக் காப்பாற்றி விட்டார். அணியையும் காப்பாற்றி விட்டார்.

## மூன்றாவது டெஸ்ட் தொடரில் இர்பானுக்கு பதில் நெக்ரா

(சென்னை)

இந்திய அணியில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த இர்பான் பதானுக்குப் பதில் ஆஷிஷ் நெக்ரா இடம் பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி சென்னையில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. விக்கெட் கீப்பர் பொறுப்பில் சிறப்பாகச் செயல்படாத பார்த்திவ் படேல் நீக்கப்படலாம் என்று எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், இளம் வீரர் பார்திவுக்கு இன்னும் வாய்ப்பளிக்க தேர்வுக் குழு முடிவு செய்தது. அவர் அணியில் நீடிக்கிறார். அதேசமயம், சென்னை டெஸ்டில் காயமடைந்த இர்பான் பதான் அணியில் இருந்து நீக்கப்படுகிறார். இது, அணிக்கு மிகப்பெரிய பின்னடைவு. அவருக்குப் பதில் ஆஷிஷ் நெக்ரா அணியில் இடம் பிடித்துள்ளார். வேறு எந்த மாற்றமும் இல்லை.

### இந்தியாவுக்கு சாதகம்

(சென்னை)

ஆஸ்திரேலிய அணித் தலைவன் ஆடம் கில்கிறிஸ்ட் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், இரு அணிகளுமே வெற்றியை குறிவைத்து தயாராக இருந்தோம். ஆனால், மழை பெய்தமை ஏமாற்றமளித்தது. மழை இல்லாமல் இருந்திருந்தால், ஒருவேளை ஆட்டம் இந்தியாவுக்கு சாதகமாக இருந்திருக்கலாம். ஆனாலும், கடைசி நாளில் எதுவும் உறுதி சொல்லமுடியாது என்றார்.

## சிம்பாவே கிரிக்கெட் சபை மீதான தடை நீக்கம்

(லாகூர்)

ஐ. சி. சி.,நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. சிம்பாவே கிரிக்கெட் சபை மீதான தடை நீக்கிக் கொள்ளப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி. ,) இரண்டு நாள் நிர்வாகக்குழுக் கூட்டம், பாகிஸ்தானில் உள்ள லாகூரில் ஞாயிறன்று முடிந்தது. இதுபோன்ற கூட்டங்களில் இந்திய கிரிக்கெட் போர்டு (பி. சி. சி. ஐ. ,) முக்கியப் பங்கு வகிக்கும். ஆனால், தற்போது பி. சி. சி. ஐ. , தலைவர் தேர்வு உள்ளிட்ட விவகாரங்கள் உயர் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், இக்கூட்டத்தில் நமது தரப்பில் யாரும் பங்கேற்கவில்லை.

இந்தக்கூட்டத்தில் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அவை:- நிறவெறிப் பிரச்சினை காரணமாக, சிம்பாப்வே கிரிக்கெட் போர்டுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கிக் கொள்ளப்படுகிறது.

## படையாண்டவெளி வீதியை திருத்துவது எப்போது?

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பண்டாரியாவெளிக் கிராமத்தில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து படையாண்டவெளி வரைக்கும் செல்லும் வீதியானது படுமோசமான நிலையில் காணப்படுகின்றது. படுவான்கரைப் பிரதேச மக்களும் பிற ஊரைச் சேர்ந்தவர்களும் இப்பாதையைக் கடந்து செல்லும் போது படும்துன்பம் சொல்லியடங்காது.

இவ்வீதியானது பள்ளமும் படுகுழியுமாகவே காட்சியளிக்கின்றது. இதனால் பிரயாணம் செய்கின்ற பாதசாரிகள் மாத்திரமின்றி சைக்கிள், மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரங்கள் போன்ற வாகனங்கள் பழுதடைவதுடன் அவர்களுடைய போக்குவரத்தும் பாதிப்படைகின்றது.

இங்குள்ள நாகதம்பிரான் ஆலயமானது படுவான்கரைப் பிரதேசத்திலே பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகும். ஆலய உற்சவ காலங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இவ்வாலயத்திற்கு வருகை தருவார்கள். ஆனால் இவ்வீதியானது படுமோசமான நிலையில் காணப்படுவதனால் ஆலயத்திற்கு வருபவர்கள் சலிப்படைகின்றார்கள்.இதனால் மக்கள் தொகை குறைவடைந்து கோயிலுக்கு வரும் வருவாயும் குறைவடைந்தே செல்கின்றது. ஆகவே இனி வரும் உற்சவ காலங்களிலாவது பக்தர்கள் பெரும் திரளாக வருவதற்கு இவ்வீதியினை புனரமைத்துத் தருமாறு பண்டாரியாவெளிக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

எனவே சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இந்த மக்களின் கோரிக்கைக்குச் செவிமடுத்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகின்றோம்.

*நலன் விரும்பி*

## பூநொச்சிமுனை 2ம் குறுக்கு வீதியை கவனிக்க யாருமே இல்லையா?

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட நாவற்குடா பூநொச்சிமுனை 2ம் குறுக்கு வீதியைப் பற்றி பல தடவைகள் ஈழநாதம் எங்கள் குரல் பகுதியிலும் மற்றும் அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டியும் எந்தவித பயனும் இல்லை.

வருவதோ மழைக்காலம். எழுதி எழுதிச் சோர்ந்து போன நாங்கள் இனி எத்தனை தடவை பத்திரிகையில் சுட்டிக்காட்டியுள்ளோம் என்பதை குறித்த பத்திரிகையுடன் நேரில் வந்தால் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அவ்வீதியைக் காட்டினால் தான் அவர்களுக்கு நிலமை விளங்கும்.மேடும், பள்ளமும், மணலுமாகக் காணப்படும் இவ்வீதியை திருத்துவதற்குயாரும் இல்லையா? மழைகாலம் வந்தால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரும் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.மாணவர்கள் பாதணிகளை கழற்றி கையில் எடுத்துக் கொண்டு தான் அவ்வீதியால் வருவார்கள்.

முச்சக்கர வண்டிகளில் பாடசாலை செல்லும் சிறார்கள் அவ்வீதியால் (வெள்ளத்திற்குள்ளால்) நடந்து வந்துதான் முச்சக்கர வண்டிகளில் ஏறிச் செல்கின்றார்கள். எனவே உரிய அதிகாரிகள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்.

*-சுழியோடி-*

# ஏங்கள் குரல்

## காணிப்பிரச்சினையும் தண்ணீர்ப் பிரச்சினையும்

கடந்த 15-10-2004 அன்று வெளியான ஈழநாதத்தின் 'எங்கள் குரல்' பகுதியில் ஏன் இந்தப் பாரா முகம் என்ற தலைப்பில் தனு, தர்ஷன் கல்லடி மட்டக்களப்பு என்பவர்கள் எழுதிய கடிதத்தைப் பார்வையிட்டேன்.

'ஏன் இந்தப் பாராமுகம்' என்ற வார்த்தையை கடிதம் எழுதியவரிடம் தான் நாங்கள் கேட்க வேண்டும். சம்மந்தப்பட்ட காணி அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி இல்லை. கிட்டத்தட்ட 52 வருடங்களுக்கு முன் புளியந்தீவு மக்களுக்கும், மற்றும் ஆஸ்பத்திரி நோயாளர்கள், மாந்தீவு நோயாளர்களுக்காகவும், கல்லடி உப்போடை, கல்லடி நொச்சிமுனை விலேஜ் கொமிற்றியால் அக்காலத்தில் இருந்த தண்ணீருக்குப் பொறுப்பான P.W.D டிப்பாட்மென்றுக்கு கொடுக்கப்பட்ட பூமி.

இங்கிருந்து பெறப்படும் நீரை நம்பி கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேருக்கு மேல் வாழ்கிறார்கள். இங்கு குடியேறியவர்கள் இந்நாட்டுப் பிரஜைதான். புளியந்தீவு மக்களும் நோயாளிகளும் இந்த நாட்டுப் பிரஜைதான். ஆனால் இந்தப்பூமியைப் பொறுத்த மட்டில் புளியந்தீவு மக்களுக்குத்தான் சொந்தம்.

இங்கிருக்கும் வீடுகளை பாராளுமன்ற அங்கத்தவர்களிடம் உத்தரவு பெற்றுக் கட்டினீர்களா? அல்லது மாநகர ஆணையாளரின் உத்தரவுடன் கட்டினீர்களா? இந்த அடாவடித்தனமான குடியேற்றத்தால் தான் புளியந்தீவு மக்களுக்கும் மற்றும் நோயாளர்களுக்கும் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எங்களுக்கு வரவேண்டிய நீர் வராமல் மிகவும் கஷ்டமாக உள்ளது மாத்திரமல்லாமல் வடிகால் அமைச்சுக்குச் சொந்தமான இப்பூமியில் மலசலம் கழித்தும் குப்பை கூழங்களைக் கொட்டியும் சூழல் மாசடைந்து போய்க் கிடக்கிறது. புளியந்தீவு மக்களாகிய எங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுமாயின் நாங்கள் தான் முன்னாலுள்ள கடலை நோக்கி முன்வர வேண்டும்.

அடாவடித்தனமாகக் குடியேறியதுமல்லாமல் வடிகால் அமைச்சுக்குச் சொந்தமான பூமியை அடைத்து விலைக்கும் விற்றுள்ளார்கள். இதெல்லாம் ஒரு தர்மமா என்று கேட்கிறோம். தயவு செய்து எங்களுக்கு வரும் தண்ணீரைத் தடை செய்பவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது என்று வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

*க.முருகுப்பிள்ளை*
*மட்டக்களப்பு*

## முனைக்காட்டு கிராமத்திற்கு விளையாட்டு மைதானம் வேண்டும்

மிகப் பழம் பெரும் கிராமமான முனைக்காட்டிலே அமைந்திருக்கும் பாடசாலைக்கும் அங்கு இளைஞர் யுவதிகள் விளையாடுவதற்கும் மைதானம் ஒன்று இல்லாது இருப்பதால் மக்கள் கவலையடைகின்றனர்.

இங்கு வாழ்கின்ற சனத்தொகையில் பலர் விளையாட்டுத் துறையிலும் திறமையானவர்களாக காணப்படுகின்றார்கள். அவர்களின் திறமைகளை வெளிக்காட்டி இளம் சமுதாயத்தினருக்கு பயிற்றுவிப்பதற்கு மைதானம் இன்றியமையாத ஒன்று எனவே விளையாட்டு இல்லாமல் கல்வியில்லை.கல்வியும் விளையாட்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. முக்கியமாக முனைக்காட்டுக் கிராமத்திற்கும் பாடசாலை மாணவர்களுக்கும் விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்துத் தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

*(சசி)*



## சிந்தனைக்கு!

மக்களிடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலையுணர்வையும் தூண்டிவிடும் கலை இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும்; இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தேசிய எதிர்ப்பிம் பக்கத்திற்கு உரமூட்டுவதாக அமையும்.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சேலை. 20-10-2004
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
தொலைநகல் : 065-2226303

# தொடர்ச்சியான சினமூட்டல் விபரீத விளைவை ஏற்படுத்தும்

சிங்களப் பேரினவாத சக்திகளின் கைக் கூலிகளாக தேச விரோதி கருணாவும் கும்பலும் மாறி மனிதப் படுகொலைகளை புரிந்து வருவது எதிர்பார்ப்புக்குரிய சமாதானத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்த மனிதப் படுகொலைகளுக்கு ஆளும் தரப்புடன் தாளம் போடும் ஈ.பி.டி.பியும் ஒத்துழைத்து வருவது நன்கு புலனாகின்றது. கடந்த ஓரிரு நாட்களில் சிறிலங்காப் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடந்தஇரு வேறு கொலைச் சம்பவங்களில் இரு நாட்டுப்பற்றாளர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் சிறிலங்கா விமானப் படை முகாமுக்கு சமீபமாகவுள்ள புதூரிலும் நகரின் ஜெயந்திபுரப் பிரதேசத்திலும் இந்த தேச விரோதிகள் மனித வேட்டை யாடியுள்ளனர்.

கடந்த இருபது வருட காலப் போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தை மீள் புனரமைத்து வடக்குக் கிழக்கில் ஒரு இயல்பு சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கில் சர்வதேச சட்ட நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்டு கையளிக்க ப்பட்ட இடைக்கால வரைபை நிராகரித்து வரும் சிறிலங்கா அரசு பதில் வரைவு தயாரித்துள்ளதாகக் கூறி காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

விடுதலைப்புலிகளின் உயர் மட்டக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்ற சூழலில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் துரோகி கருணாவின் கும்பல்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் காரியங்களில் சிறிலங்காப் படைத்தரப்பு ஈடுபடுவது கவலைக்குரியது.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்காது தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகளுக்கு ஊக்கமளித்து தேசியத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைவது சமாதானத்தில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். சமீப காலமாக சிறிலங்காப் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழ் தேச விரோதிகளால் மேற்கொள்ளப்படும் படுகொலைக் கலாசாரத்துக்கு படைப்புலனாய்வுப் பிரிவினர் தொடர்ச்சியான உறுதுணை வழங்குவது அரசாங்கத்திற்கும் விடுதலைப்பு லிகளுக்குமிடையிலான போர் நிறுத்த உடன்பாட்டை பாதிப்ப டையச் செய்யும்

தேச விரோதிகள் எல்லோரையும் ஒன்றிணைத்து கட்சி ஒன்றை உருவாக்கி களத்தில் இறக்க சிங்களப் பேரினவாத சக்திகள் முயற்சிப்பது சமாதானத்திற்கான புரிந்துணர்வை ஏற்படுத்தாது.

சிறிலங்காப் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடக்கும் படுகொலைகளுக்கு படைத்தரப்பினரே பொறுப்பேற்க வேண்டும். விடுதலைப்புலிகள் படைத்தரப்பினருடனான சந்திப்புக்களின் போதும் இதனை பல தடவைகளில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும் இன்றும் ஒரு சாதகமான சூழலைப் படைத்தரப்பு வெளிப்படுத்தவில்லை. துரோகிகளுக்குத் தீனிபோடும் காரியங்களே அரங்கேறி வருகின்றன.

இது ஆபத்தான ஒரு சூழலை தொடர்ச்சியாக மையம் கொள்ள வைக்கும். எனவே ஆளும் தரப்பு இவ்விடயத்தில் அக்கறை கொண்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக சினமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வது எதிர் காலத்தில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

# சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்த வேண்டும்

## - சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு -

(நமது நிருபர்)

அமைதிப் பேச்சுக்களுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் அபூர்வ நிலைமை இப்போது தோன்றியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தித் தாமதமின்றிப் பேச்சை உடன் ஆரம்பித்து முன்னெடுக்கும்படி இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியமும், சர்வதேச சமூகமும் அதிகளவில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோரியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன். அரசமைப்பு விவகார உயர் குழுவினருடன் மேற்கு நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுவரும் தமிழ்ச் செல்வன் தற்போது பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் தங்கியுள்ளார்.

அங்கு திங்கட்கிழமை காலை அவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹார்வே ஜுவான் ஜின்னை, ஐரோப்பிய ஒன்றியச் செயலகத்தில் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

ஈழத்தமிழர்களின் நிலைமையை இந்தச் சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் விலாவாரியாக எடுத்து விளக்கினார். அவர், நான்கு அம்சங்கள் தொடர்பாக இலங்கை அரசுத்தரப்பு மீது ஐரோப்பிய யூனியன் அழுத்தம் கொடுக்கவேண்டும் என வேண்டினார்.

அமைதி முயற்சிகளுக்குத் தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் தரும் நிபந்தனையற்ற ஆதரவைச் சரியாகப் பயன்படுத்தும்படி அரசை வற்புறுத்துங்கள். அமைதி முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதாலும், தமிழ் மக்களின் அவசர, அத்தியாவசியத் தேவைகள் நிறைவுசெய்யப்படாததாலும் அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தமிழ் மக்களின் மனதில் பெரும் அவநம்பிக்கையும், அச்சமும், பீதியும் ஏற்பட்டுள்ளன. அவற்றைக் களையும் விதத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க அரசை வற்புறுத்துங்கள்.



அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் அதற்கான காலம் கடந்தும் இன்றும் நிறைவேற்றப்படாமல் இழுபடுகின்றன. இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் எதிர்காலத்தைக் கேள்விக்குறி யாக்கியுள்ளது. ஆகவே, புரிந்துணர்வு உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் தனக்குள்ள கட்டுப்பாட்டை நிறைவேற்றும்படி அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்.

ஆயுதக்குழுக்களும், சமாதான விரோதக் குழுக்களும் கட்டு மீறிச் செயற்படுவதால் யுத்த நிறுத்தத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய குழுக்களை அடக்கிவைக்க நடவ டிக்கை எடுக்கும்படி அரசுத்தரப்பை வலியுறுத்துங்கள். இப்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சரை நேரில் கோரினார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

முன்னதாக திங்கட் கிழமை பெல்ஜியம் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளோடு தமிழ்ச்செல்வன் பேச்சு நடத்தினார்.

ஞாயிற்றுக் கிழமை மாலையில் அவர் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவிருந்தார். நேற்று மாலை தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் குழுவினர் நோர்வே செல்கிறார்கள். நோர்வே பயணத்தை முடித்துக்கொண்டு அவர்கள் சுவிடன் புறப்படுவார்கள்.

# சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பொருளாதாரம் கல்வி, தேசியம் ,சிந்தனை வேண்டும்

## -பங்குத்தந்தை எக்ஸ்.ரஜீபன்-

(சரவணன்)

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பொருளாதாரம் கல்வி, தேசியம் என்ற சிந்தனை வேண்டும் அப்போதுதான் சமூகம் முன்னேற்றம் அடைகின்றது என திருக்கோவில் தேவாலய பங்குத்தந்தை. எக்ஸ் ரஜீவன் தெரிவித்தார். பங்குத்தந்தை மேலும் பேசுகையில்: கடந்த யுத்த காலத்தில் இடம் பெயர்ந்து மீண்டும் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல உதவிகளை இலவசமாக செய்து வருகின்றது. இதை நாம் நன்கு பயன்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் நாம் இன்னும் எமது பொருளாதாரத்திலோ கல்வியோ 20 வருடங்களைப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

கஞ்சிகுடியாறு, காஞ்சம்குடா மீள்குடியேறிய 450 குடும்பங்களுக்கு புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச தாபனம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் வைபவம் வைபவரீதியாக கஞ்சிகுடியாறு பல் தேவைக் கட்டிடத்தில் நடைபெற்றது.

எனவே இவைகளைப் பயன்படுத்தி உழைக்க வேண்டும் என்ற சிந்தனை வேண்டும். அப்பொழுதுதான் எமது குடும்பத்தை , கிராமத்தை, சமூகத்தை, தேசியத்தைக் காப்பாற்ற முடியும் என்றார்.

இவ் வைபவத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன்,பொருமியப் பொறுப்பாளர் சங்கரி, புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச ஸ்தாபனத்தின் மட்டு. அம்பாறை மாவட்ட முகாமையாளரும், திட்ட அதிகாரியுமான ஐ.ஜே.சில்வஸ்ரர், திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே. தவராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# பல்கலைக்கழக கல்வித்தரத்தை உயர்த்த உலக வங்கி நிதியுதவி

(விரி.சகாதேவராஜா)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழக கல்வித் தரத்தை உயர்தத கல்வியமைச்சு ஆறு ஆண்டு காலத் திட்டமொன்றினை செயற்படுத்தி வருகின்றது.

உலக வங்கித் திட்டத்திற்கு (IRQUE) நிதி உதவியளித்துள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக அமைப்புக்கும் உருவாகும் பட்டதாரிகள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று இப்புதிய திட்டம் எதிர்பார்க்கிறது.

மேலும் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், சமூகநல்லிணக்கத்தில் பட்டதாரிகள் திறமைகளைக் காட்டுவதோடு, மாணவர் நலனிலும் அக்கறை காட்டுதல் அவசியம். நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிப் பிரச்சினையை குறைக்கவும் இப்புதிய திட்டம் உதவுமெனக் கூறப்படுகின்றது.

2003இல் ஆரம்பித்த இத்திட்டம் 2008ஆம் ஆண்டுவரை அமுலிலிருக்கும்.

பிராந்தியக் கல்வியைக் கட்டியெழுப்புதலும், பல்கலைக்கழகக் கல்வியைத் தரமாக்குதலும் இதன் ஒரு நோக்கமாகும்.

இதேவேளை கொள்கை திட்டமிடலும், அமுல்படுத்துதலும் (PPDU) என்ற பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



அண்மையில் அட்டாளைச் சேனை சம்பு மீள்குடியேற்றக் கிராமத்தில் ''எகோ அமைப்பின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம் (ஐ.ஓ.எம்) ரூபா 6500 பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது. இதில் ஐ.ஓ.எம். அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் வெல்வாகரன், பிரதேச செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் ஆகியோர் உதவி வழங்கும் குடும்பத்தலைவர்களுக்கு பொருட்கள் வழங்குவதையும், கலந்து கொண்டவர்களுள் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும் அட்டாளைச்சேனை நிருபர்)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## வாழ்க்கை செலவுக்கு எதிராக கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கொழும்பு நகரில் 5 இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டங்கள் கொள்ளுப்பிட்டி, மருதானை தொழில்நுட்பக் கல்லூரி, கொச்சிக்கடை, கொம்பனித்தெரு, ஹைட் பார்க் ஆகிய இடங்களில் இடம் பெற்றன.

கடந்த 7 மாதங்களாக ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் மறந்த விடயங்களை ஞாபகமூட்டவே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளர்களின் சம்பள உயர்வை வழங்குவது உர விலைகளை குறைப்பது தொடர்பாக இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

## முதலைக்குடா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா இன்று

(சசி)

முதலைக்குடா மகா வித்தியாலய மாணவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து நடாத்தும் ஆசிரியர் தின விழா இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சிரேஷ்ட மாணவர் தலைவர் சி.ஜீவிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதிகளாக பட்டிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். தயாசீலன், வித்தியாலய அதிபர் எஸ். சின்னத்தம்பிப்போடி, முன்னாள் கொத்தணி அதிபர் எஸ். சந்திரசேகரம் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களால் ஆசிரியர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதோடு மாணவர்களின் பலதரப்பட்ட கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

## மல்கம்பிட்டி பள்ளிவாசலுக்கு சூரியஒளி மின்சாரம்!

(வேதசகா)

150 வருடகாலம் பழைமை வாய்ந்த சம்மாந்துறை மல்கம்பிட்டி கலந்தர் சிக்கந்தர் வலியுல்லாஹ் பள்ளி வாசலில் கடந்த ஞாயிறன்று (17.10.2004) இப்தார் நிகழ்வும், மின்னொளி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

கிழக்கு உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயிலின் ஏற்பாட்டில் வரலாற்றில் முதற்தடவையாக இப்பள்ளிவாசலுக்கு சூரியஒளி மின்சாரம் வழங்கப்பட்டது.

சம்மாந்துறை நயினாக்காடு வீதியில் களனிகளால் சூழப்பட்ட ஏகாந்தமான இடத்தில் இப்பழைய பள்ளிவாசல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறையில் இருந்து சுமார் 1000 பொது மக்கள், உலமக்கள் ஞாயிறன்று அங்கு சென்று நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

இந்தியாவைச் சேர்ந்த இலங்கையில் அல்குர்ஆன் பிரதி எழுதிய மூத்த மத பிரமுகர் ஒ.எம்.பாஸி ஆலிம் கலந்து கொண்டு மார்க்கப்பேருரை நிகழ்த்தினார்.

## வாணிவிழாக்கள்

(நமது நிருபர்)

பாண்டிருப்பு இந்து மாமன்றம் ஏற்பாடு செய்துள்ள நாமகள் விழா கலை நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இவ்வித்தியாலய அதிபர் திருமதி.அ. பேரின்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தஜி மகாராஜ் கலந்து கொள்வார். இந்த வாணி விழா நிகழ்வில் நாமகளின் சிறப்பியல்பு என்ற தலைப்பில் ஒய்வு பெற்ற தபால் அதிபர் கவிஞர் ஞானமாணிக்கம் சிறப்புரையாற்றவுள்ளார்.

இன்றைய தினம் வாணி விழா தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, பண்ணிசை, வில்லிசை, நடனம், நாடகம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விஷ்ணு வித்தியாலய வாணி விழா இன்று காலை 10.00 மணிக்கு வித்தியாலய அதிபர் எம்.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வாணி விழா நிகழ்வில் மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிசனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜி மகராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

### மருதமுனையில்...

மாணவர்களுக்கு இலவசமாக சீருடை, அல்குர்ஆன் நூல்கள், அப்பியாசக் கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன.

கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் இந்நிகழ்வுக்கு அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளரும், ஜம்மியத்துல் உலமாசபை கிளைத் தலைவருமான எம்.எஸ்.எம்.ஜமால்தீன் சிறப்பதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

பெருந் தொகையான மக்கள் இவ்வைபவங்களில் கலந்து கொண்டனர். உப பிரதேச செயலாளர் ஏ.ஸி.அன்சாரும் கலந்து கொண்டனர். பின்னர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

## நிமலராஜனின் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

**யாழ். ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும், வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் நேற்று யாழ். பேருந்து நிலையத்தின் முன்பாக பத்திரிகையாளர்கள் கலந்து கொண்ட கவனயீர்ப்பு போராட்ட மொன்று நடைபெற்றது.**

நேற்று நண்பகல் 12 மணி முதல் 1 மணிவரை யாழ். பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தை நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. 50ற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினார்கள்.

போராட்டம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- குருஷேத்திர மையத்திலிருந்து தன்னின மக்களின் உரிமைக்காகத் தனது பேனாவை ஆயுதமாக்கி உறுதியாகக் குரல் தந்த ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 4 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

ஆயினும், இன்றுவரை குற்றவாளிகள் சட்டத்தின்முன் தண்டிக்கப்படாமலும், சட்டமா அதிபரது பணிப்பிற்காகக் காத்திருப்பதாகவும், கூறி ஏதோ காரணங்களால் விசாரணைகள் இதுவரை முடிவெதனையும் கண்டிருக்கவில்லை. இத்தகைய சூழலில் வடக்கு-கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் படுகொலைகளும் மீண்டும் பெருமளவில் அதிகரித்து வருகின்றன. கிழக்கில் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலைச் சம்பவமும் அத்துடன் அங்குள்ள ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் இதற்கு நல்லதோர் உதாரணம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நிமலராஜனின் 4ஆவது வருட நினைவு நாள் தொடர்பான வைபவம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் சங்கத்தலைவர் வே.தவச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

### மக்களை ஏமாற்றிய...

தூட்டப்பட்ட மயக்க உணவுப் பண்டங்களைக் கொடுத்து நூற்றுக்கு மேற்பட்ட களவுகளைச் செய்த இந்த நபர் நீண்ட காலமாக பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் டிமிக்கி விட்டு வந்துள்ளார்.

கல்முனை இ.கி.மி. பாடசாலை வீதியில் வைத்து துரத்திப் பிடிக்கப்பட்ட இந்த நபரிடம் போதைப் பொருட்களை ஏற்றும் ஊசி, கஞ்சா, போலியாகத் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள், அப்பிள் பழம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக பொலிசாரையும், பொது மக்களையும் இந்த நபர் ஏமாற்றிக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐயங்கேணியில்...

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேச விரோதிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஐயங்கேணி பாரதி கிராமத்தைச் சேர்ந்த நாட்டுப்பற்றாளர் கதிர்காமத்தம்பி- கணேசமூர்த்தி (வெள்ளை ராஜு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவர் தமிழ் தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கு தன்னாலான உதவிகளையும் ஒத்தாசைகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு உறுதுணை புரிந்தவர். இந்நாட்டுப் பற்றாளரின் இழப்பு தமிழ் தேசியத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும்.

இவரது வீரச்சாவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் பிரிவு ஆழ்ந்த அனுதாபத்தையும் வீரவணக்கத்தையும் தெரிவித்துள்ளது.

### படைகளின்...

கனவு காணும் பேரினவாதிகளின் குகைக்குள் இருந்துகொண்டு தமிழ் மக்களின் மீது அட்டுழியம் செய்து வரும் பாதகர்களின் கூட்டத்தோடு கருணாவும் கைகோர்த்துள்ளனர்.

பேரினவாத படைகளின் ஏவலாளியாகச் செயற்படும் கருணா, அவர்கள் போடும் எலும்புத் துண்டுகளுக்காக மாவீரர்களையும், தாய் நாட்டையும் காட்டிக் கொடுக்கும் ஈனப்பயலாகி இழிவின் கடைசிக்குப் போய் மக்களின் தியாகத்தை விற்றுத் தின்று வருகிறார்.

இதில் தமிழ் மக்களாகிய நாம் சில விடயங்களை இனம் காண வேண்டியிருக்கிறது. ஒரு விடுதலை வீரன் ஒரு போதும் அடக்குமுறைப் படையோடு படுத்துத் தூங்குவதில்லை தாக்குதலை நடத்தி விட்டு ஆக்கிரமிப்பு படையின் பாசறைக்குள் பதுங்கியதும் இல்லை. எண்ணிக்கையில்லா இன அழிப்பைச் செய்த படைகளின் காலிடுக்குகளுக்குள் இருந்து கொண்டு அச்சத்தை விளைவிக்கும் நடவடிக்கையில் கருணா ஈடுபடுவது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

கருணாவைக் கண்டு அச்சப்பட எம்மக்கள் என்றும் மந்தைகள் அல்லர், மாவீரர்களின் கனவுகள் மலரும், தடைக்கற்கள் அனைத்தும் தகர்க்கப்படும்..

“ நிச்சயம் தமிழீழம் மலரும் நிரந்தரமான விடிவு விரைவில் கிடைக்கும்”

### மட். மாவட்டத்தில்...

ணியிலுள்ள அவரது வீட்டிலிருந்து கள்ளியங்காட்டிலுள்ள அவரது காணிக்கு சென்று வீடு திரும்புவதற்காக வாகனத்தில் ஏறிய சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூட்டை மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு வந்த மட்டக்களப்பு நீதவான் ஏ.எச்.எம். அஜ்மீர் சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்து செல்லுமாறும் உத்தர விட்டார்.

ஓய்வு பெற்ற வங்கி அதிகாரியான கிங்ஸ்லி ராசநாயகம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திலும் சில காலம் பணியாற்றினார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட இவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான போதும் நாடாளுமன்றத்திற்கு சென்று பதவிப் பிரமாணம் செய்யாது தனது பதவியை சுயவிருப்பின் பேரில் ராஜினாமாச் செய்து கொண்டார்.

துப்பாக்கி சூடு நடைபெற்ற இடத்திற்கு சுமார் நூறு யார் தொலைவில் ஜெயந்திபுரம் சிறிலங்கா பொலிஸ் காவலரண் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தையடுத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆயுதப் போராட்டம்...

க்கைத் தரத்தை பேணவில்லையாயின் மாவட்டத்தின் எந்த அபிவிருத்தியும் நிலை பெறாது. நகரங்கள் கட்டி எழுப்பப்பட்டிருந்தாலும் கிராமப் புறங்கள் அவ்வாறாகவே இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிடப்பட்டு ஜே.வி.பி. கட்சியினர் தொழில் சட்டங்களை தம்வசம் வைத்திருக்கின்றனர்.

திருகோணமலையின் பொருளாதார மையம் ஜே.வி.பி.யின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. குடியேற்றங்களில் கூட அவர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கிறது. இராணுவ அழுத்தத்தால் மட்டும் எதனையும் கொண்டு வரமுடியும் என்று எண்ணக் கூடாது. மக்கள் சக்தியின் மூலமாகவே நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தமிழ் பரம்பல் குறைவாக இருப்பதன் காரணமாக தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்கள் கூட தமது கட்டுப்பாட்டுப் பகுதி என அரச படையினர் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த காலங்களில் இருந்து அண்மைக் காலத்தில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். இந்த இடங்களில்பாரிய விகாரைகள் அமைத்து சிங்களப் பிரதேசம் என அரசும், படையினரும் பறை சாற்றி வருகிறது. தமிழ் கிராமங்களின் இடம்பெயர்ந்த எமது மக்கள் உடனடியாக அங்கு குடியமர்த்தப்பட வேண்டும். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் செய்து கொடுக்க வேண்டும்.

அகதி முகாம்களில் உள்ள மக்களை ஏன் மீளக் குடியமர்த்த முடியாது. இதனை யார் செய்வது. அரசியல்வாதிகளாகிய நீங்களே செய்ய வேண்டும் இந்த விடயத்தை உங்களிடம் வேண்டுகோளாக விடுகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தின் நிலவரம்பற்றி அறிந்து கொள்வதற்காக விஜயம் செய்த நீங்கள் கிழக்கு மாகாணத்தில் மடக்களப்பு, அம்பாறை மக்களின் கஸ்ர துன்பங்களை நீங்கள் கண்டறிய வேண்டும். இதற்கு பின்னர் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி முன் வைக்க வேண்டும்.

கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சரியான பாதை அமைப்புக்கள் இல்லை. கிராமங்களில் அடிப்படைப் பிரச்சினைகள் அவ்வாறே தீர்க்கப்படாது இருக்கின்றது.

அடிப்படை தேவைகள் பற்றி சிந்திக்காது அபிவிருத்தி பற்றி நாம் சிந்திக்கின்றோம். அடிப்படைகள் மாற்றப்பட வேண்டும். நீங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. எமது மக்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் அவர்களது பொருளாதாரங்கள் அதிகரிக்க நாங்கள் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். என்றார்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 20.10.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.